கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (ஏப்ரல் 2015) (மீள்பரீட்சை) (பழையபாடத்திட்டம்)

# EDU/S 2101 கல்வி உளவியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) கற்றலானது முதிர்ச்சியுடன் இணைந்த ஒரு செயற்பாடாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) முன் குழந்தைப்பருவத்தின் தெறிவினைச் செயற்பாடுகளை உதாரணம் தந்து விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) பாடசாலை புகாநிலைப்பருவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

02.(அ) இயல்பூக்கம் என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

(ஆ) மாஸ்லோ குறிப்பிடும் தேவைகளைப் படிமுறையில் நிரற்படுத்துக.

(10 புள்ளிகள்)

(இ) இத்தேவைகள் ஒவ்வொன்றையும் வகுப்பறையில் ஆசிரியர் பிரயோகிக்க முடியும் என்பதை ஆராய்க.

(10 புள்ளிகள்)

03.(அ) "உயிரியின் கற்றல்" தொடர்பாகப் பல்வேறு அறிஞர்கள் கூறிய கருத்துக்களை முன்னிலைப்படுத்தி கற்றல் தொடர்பான விளக்கங்களை முன்வைக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் தோண்டைக்கின் பயிற்சிவிதி, விளைவு விதி, ஆயத்தவிதி ஆகியன எவ்வாறு வினைத்திறனைப் பயன்பாட்டில் பிரயோகிக்கப்படுகின்றன என்பதை ஒவ்வொரு உதாரணத்தின்மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) தோண்டைக்கின் பயிற்சி விதியானது எவ்வாறு "கற்றல் பாதை" என்னும் எண்ணக்கருவுடன் தொடர்புறுகின்றதென்பதை சுருக்கமாக ஆராய்க.

(08புள்ளிகள்)

04.(அ) ஐவன் பவ்லோவ் (Ivan Pavlov) இன் கற்றல் கொள்கையிலிருந்து உருவா
பின்வரும் உபகொள்கைகளாவன வகுப்பறைக் கற்பித்தலில் தற்போது எவ்வ
பிரயோகத்திலுள்ளதென்பதை உதாரணத்தின்மூலம் விளக்குக.

(i) உயர் நிலை நிபந்தனைப்பாடு

(ii) மறைதல் தானாகவே மீண்டும் தோன்றல்

(iii) பொதுமைப்பாடு

(10 புள்ளிக

(ஆ) ஸ்கின்னரின் (Skinner) தொழிற்பாட்டு நடத்தைகளைச் சுருக்கமாக விளக்கி,

(i) நேர் - எதிர் மீளவலியுறுத்தல்

(ii) தெரிவுசெய் மீளவலியுறுத்தல்

(iii) தொடர் மீளவலியுறுத்தல்

என்பவற்றைக் கற்றலுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(10 புள்ளிக

(இ) பின்னூட்டல் (feed back) என்பதை வகுப்பறைக் கற்பித்தலை மையமா
வைத்து விளக்குக.

(05 புள்ளிகள்

05.(அ) கெஸ்டால்டின் அகக்காட்சிக்கொள்கையை ஆசிரியர் கனிஷ்ட இடைநிலை
வகுப்புக்களில் பிரயோகித்து எவ்வாறு பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பதை
உதாரணம் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்

(ஆ) கக்னேயின் "கற்றலின் மாதிரி அமைப்பு" மாதிரியின் எட்டு கற்றல்
முறைகளையும் ஒவ்வொரு உதாரணத்துடன் சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

(இ) "கற்றல் இடமாற்றம்" என்பதை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

06. மனவெழுச்சி என்னும் பதத்தினை விளக்கி, குழந்தையின் பிற்பருவகாலத்தில் சமூக
மனவெழுச்சி வளர்ச்சி எவ்வாறு விருத்தியடைகின்றதென்பதை பல்வேறு
உதாரணங்களுடன் விளக்கமாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

*****